★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

'அணுயுகத்தின் அற்புதம்

"காஷ்மீர் பிரச்சினை காரணமாக பாகிஸ்தானுக்கும்—இந்தி யாவுக்கும் இடையே விரைவில் போர் ஏற்படக்கூடும் என்ற பயத் தால், 'நேரு சர்க்கார்', புதுடில்லியிலுள்ள முக்கிய 'குறிப்பேடு'களை ஐதராபாத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். இதன் காரணமாகவே குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், தென்னாட்டி தமது கோடைகாலக் குடியிருப்பு இடத்தை ஏற்படுத்தியுள்ளா என்று, திரு. முத்துராமலிங்கத் தேவர், எம்.எல்.ஏ., சமீபத் திருநெல்வேலியில், ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட் தாக, இதழ் ஒன்றில் செய்தி வெளிவந்துள்ளது.

மலர் 3] சென்னை: சித்திரை 30உ சனி (12—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 31உ ஞாயிறு (13—5—56) [இதழ் 2

தாகூர் முயன்றும் கற்க இயலாத இந்தி!

தாறுமாறான இலக்கண அமைப்புடையது!

தாகூரின் பரிசுபெற்ற படைப்புகள் தாய்மொழியிலேயே அமைந்தவை

ஆங்கிலம் மட்டும் கற்றால் போதாதாம்

பல இந்திய மொழிகளையும் கற்க வேண்டுமாம்

சென்னை கவர்னர் பிரகாசா பேச்சு

உதகை, மே 10—

இந்தி மொழியின் 'இலட்சணம்' என்ன என்பதை சென்னை கவர்னர் பெருமான் இங்கு விளக்கி யிருக்கிறார்.

நோபல் பரிசில் பெற்ற வங்க இலக்கிய மேதையான ரவீந் திரநாத் தாகூர், இந்த இந்திமொழியைக் கற்றுக்கொள்ள முயற்சித்திருக்கிறார்; ஆனால், அவரால் கற்க முடிந்ததா என்றால், அதுதான் இல்லை. (அதற்குக் காரணம் தாகூரின் திறமைக் குறைவா யிருக்கமுடியாது.)

இந்தி மொழியின் இலக்கணம் இருக்கிறதே, அந்த இலக்க ணத்தின் விசித்திரமான அமைப்புத்தான், தாகூர் இந்திகற்க முடியாமற் போனதற்குக் காரணம்.

இந்தி மொழியில் பால் பற்றிய இலக்கணம் தாறுமாறாக அமைந்திருப்பது, இந்திமொழி கற்கும் முயற்சியையே தாகூரைக் கைவிடுமாறு செய்துவிட்டது.

—இந்தத் தகவலை, சென்னை கவர்னர் பிரகாசா, ரவீந்தரநாத் தாகூரின் பிறந்தநாள் விழாக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசுகையில் கவர்னர் பிரகாசா, "தாகூர் தமது மகத்தான காவிய—நவீன நாடகப் படைப்புகளை எல்லாம் வங்காளி மொழியிலேயே செய்தார் என்றும், ஆங்கில மோகம் இந்தியாவெங்கும் பரவலாகப் பெருகியிருந்த நேரத்தில்கூட, தாகூர், தனது தாய் மொழியான வங்க மொழியிலேயே தமது எண்ணங்களை வெளியிட்டது, புதியதொரு சகாப்தத்தையே துவக்கிவைத்தது என்றும் கூறலாம்.

"இந்திய மொழிகளில் உயர்ந்த உணர்வுகளையும், என்

(4-ம் பக்கம் பார்க்க)

'வள்ளுவர் நகர்' தரும் செய்தி

(தில்லை-வில்லாளன்—நமது விசேட நிருபர்)

திருச்சி வள்ளுவர் நகரில் திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டின் ஏற்பாடுகள் அனைத்தும் முடிவுறும் தருவாயிலிருக்கின்றன.

ஓவியக் காட்சிக்கு—200 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்ட பந்தல் அமைக்கப்பட்டிருக்கிறது. ஓவியத் துறையில் திறமை வாய்ந்த தோழர் பழனியும், மற்ற தோழர்களும் ஓய்வின்றி தங்களின் பணியைச் செய்துவருகின்றனர்.

மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியான பந்தல்—தொடர்ந்து ஒரே வரிசையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

தாய்மார்கள் இடையிடையே சிறிது நேரம் தங்கி ஓய்வு பெறுவதற்கும், வைத்திய வசதிக்கும் தனிப் பந்தல்கள் அமைக்கப்பட்டுவருகிறது.

உணவு விடுதிக்கான 'அழகிரிப் பந்தல்' வேலை முடிந்துவிட்டது.

சென்னையிலிருந்து வந்துள்ள ஓவிய நிபுணர் செல்லையா குழுவினர் மாநாட்டு முகப்பினைச் சிறப்பித்து வருகின்றனர். தோழர் கே. எம். கண்ணபிரான் இவர்களுக்கு உதவியாயிருந்து பணியாற்றிவருகிறார்.

மாநாட்டு மேடையும், கலையரங்க மேடையும் அமைத்தாகிவிட்டன; 'ஸ்டால்'களுக்கான விடுதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாநாட்டுக்கு அமைக்கப்பட்டுள்ள இப்பந்தல் அனைத்தும் ஒரு சிறிய அழகிய நகரைப்போலவே காட்சியளிக்கிறது.

ராபி குழுவினரின் மின்சார அலங்காரப் பணியும் தீவிரமாக நடைபெற்றுவருகிறது.

பந்தல் வேலைகளை, மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவரான தோழர் எஸ். முத்துவும், தோழர்கள் என். சாம்பு, வானமாமலை, திண்டுக்கல் சமதர்மம், முத்துக்கருப்பன் ஆகிய தோழர்கள் உடனிருந்து கவனித்து வருகின்றனர்.

வரவேற்புத் தலைவர் அன்பில் தர்மலிங்கம், செயலாளர் எம். எஸ். மணி, பராங்குசம், கருணானந்தம், முத்துகிருஷ்ணன், நகரசபை உறுப்பினர் நாகசுந்தரம் உள்ளிட்ட வரவேற்புக்குழுவினரும், தொண்டர் படைத் தலைவரும், தொண்டர்களும் மற்ற எல்லா வேலைகளையும் ஒழுங்குபெற செய்து வருகின்றனர்.

பம்பாய் போன்ற வெளிமாநிலங்களிலுள்ள தி. மு. கழகத் தோழர்களும், திராவிடத்தின் பல பாகங்களிலிருந்தும் 'டிரங்' போன், தந்தி, தபால் மூலம் மாநாட்டின் விவரங்களைக் கேட்டு வருகின்றனர். இதற்கான விவரங்களை தோழர் போளூர்-சுப்பிரமணியம் தெரிவித்து அலுத்துப் போய்விட்டார்; என்றாலும் டெலிபோன் அவரை விட்டபாடில்லை,

தினசரி ஏராளமான உள்ளூர் மக்கள் பந்தல் காட்சியினைக் கண்டு மகிழ்வெய்தி செல்லுகின்றனர்.

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என் வி நடராசன், தோழர் கே ஏ. மதியழகன் ஆகியவர்களடங்கிய சட்டதிட்டத் திருத்தக் குழுவினர், அண்ணா, தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எஸ். முத்து, தில்லை வில்லாளன் ஆகியவர்களின் உதவியால் திருத்தப்பட்ட சட்டதிட்ட நகல் அச்சிடப்பட்டு இன்று எல்லா பொதுக் குழு உறுப்பினர்களுக்கும் அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது.

அண்ணா அவர்களும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், மாநாட்டின் மற்ற எல்லா ஏற்பாடுகளையும் உடனிருந்து கவனித்து வருகின்றனர்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், வள்ளுவர் நகரிலுள்ள தற்காலிகத் தலைமை நிலையத்தின் பொறுப்புகளை கவனித்து வருகிறார்.

இலங்கையில் சாதி ஒழிப்பு

சர்க்கார் சட்டமியற்றும்

சாதி வேற்றுமைகளைக் கையாளுபவர்களைத் தண்டிப்பதற்கு அதிகாரமளிக்கும் சட்டம் ஒன்றை இலங்கை அரசினர் விரைவில் இயற்றப் போகின்றனராம். புத்தரின் பிறந்த தின விழாவன்று இச்சட்டம் கொண்டு வரப்படுமாம். இலங்கை சர்க்காரின் முக்கிய சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றெனக் கூறப்படுகிறது.

சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்க!

ஒரு வாரத்தில் மசோதா வருமாம்

கொழும்பு, மே 11—

சிங்களத்தை மட்டுமே அரசியல் மொழியாக்கும் மசோதா அடுத்த வாரத்திற்குள் இறுதியாகத் தயாரிக்கப்பட்டுவிடுமெனத் தெரியவருகிறது.

இம்மசோதா நிறைவேறிய பின்னர், அரசினர் இலாகாக்களிடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்துகள் சிங்களத்திலேயே இருக்குமென்றும், ஆனால், தமிழில் சர்க்காருக்கு எழுதப்படும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதிலளிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தித் திணிப்பு உறுதியாகிறது?

இப்போதிருந்தே பொதுப் பணிப் பரீட்சைகள் இந்தியிலாம்!

இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசுகள்?

புதுடில்லி, மே 11—

இப்போதிருந்தே மத்திய பொதுப்பணித் தேர்வுக் குழுவினர், பெரும் சர்க்கார் பதவிகளுக்காக நடத்தும் பரீட்சைகளை இந்தியிலும் நடத்தலாம் என்று இந்தி மொழி (திணிப்புக்) குழுவினர் சிபாரிசு செய்யத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

1965-ம் ஆண்டில், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி நுழைக்கப்படவிருக்கிறது. அதுவரையில், இப்போதிருந்தே ஆங்கிலத்துடன் இந்தியிலும் பரீட்சைகளை நடத்தலாம் எனவும், இதில் பரீட்சை எழுதும் நபர், தம் விருப்பம்போல் இந்தியிலோ, ஆங்கிலத்திலோ விடையளிக்கலாம் என்றும் சிபாரிசு செய்யப்படவிருக்கிறதாம்.

15 ஆண்டுகளுக்குள் இந்தியை ஆங்கிலத்தின் இடத்தில் அமர்த்திவிடவேண்டும் என்ற முடிவு நிச்சயமாகிவிட்டதாம்.

அதற்குப் பிறகும் ஆங்கிலத்தை அரசாங்க அலுவல்களுக்கு உபயோகித்துக் கொள்ளவேண்டுமானால் அதற்காக, அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவை இல்லை என்றும், 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஆங்கிலத்தை உபயோகித்துக் கொள்ளும் காலவரம்பை நீடிக்க மக்கள் சபைக்கு, அரசியல் சட்டப்படி அதிகாரமிருக்கிறது என்ற சென்னை சர்க்காரின் கருத்தை இந்தித் திணிப்புக் குழுவினர் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வரும் ஜூன் திங்களில் ஸ்ரீநகரில் கூடி இந்தித் திணிப்புக் குழு தன் அறிக்கையைத் தயாரிக்குமாம்.

பொதுத்தேர்தல்பற்றி பிரதமர் நேரு

புதுடில்லி, மே 11—

திட்டமிட்டுள்ளபடி பொதுத் தேர்தல்களை 1957 மார்ச் திங்களில் நடத்த அரசினர் விரும்புவதாக பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்,

தொழிலாளர் வாழ்க்கைச் செலவு உயர்வு

சென்னை, மே 11—

1956 ஏப்ரல் திங்கள் 28-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரத்தில் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவு 355-புள்ளியாக உயர்ந்துள்ளது. அரிசி, காய்கறிகளின் விலையேற்றமே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது

தம்மம்பட்டி தோழர்கள் வழக்கு

மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

ஆத்தூர், மே 11—

பிப். 20 அர்த்தால் சம்மந்தமாகக் கைது செய்யப்பட்ட தம்மம்பட்டித் தோழர்கள் வழக்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரசாங்கத் தரப்பில், டாக்டர் ஏ. சி. கணேசன் (அரசாங்க மருத்துவர்) சாட்சிகூறினார்.

அதன்பின் மாஜிஸ்திரேட் அவர்கள், வழக்கு விசாரணை மீண்டும் 23-5-56-ந் தேதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகக் கூறினார்.

23-ந் தேதி என்றவுடன், வழக்கில் சம்மந்தபட்ட தோழர்கள் மிகவும் களிப்படைந்தனர். மாநாட்டிற்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு மகிழ்வு கொண்டனர்.

வேலூர்-(சேலம் மா.) தோழர்கள் வழக்கு

பரமத்தி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்ற 14 தோழர்களின் வழக்கின் தீர்ப்பு விவரம் 3-ம் பக்கம், 2-வது கலத்தில் வெளியாகியுள்ளது.

தோழர்கள் சார்பில் வழக்கறிஞர் செட்டோவும், வழக்கைக் கவனிப்பதற்காக தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், கே. எஸ். மணி, ஏ. நாச்சிமுத்து, மா. மணி, ராமசாமி முதலியோரும் மற்றுமுள்ள கழகத் தோழர்களும், பொதுமக்களும் ஏராளமாக நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
...ன் கிளை 12—5—'56 சனி

வீரரே விரைவீர்!

திராவிட நாடு, நமது இறுதி இலட்சியம். திராவிடத்தை, தனிப்பெரும் சுதந்திர ஜனநாயகக் குடியரசாக நிர்மாணிப்பது நமது கழகத்தின் மிகச் சிறந்த குறிக்கோள்.

அரசியல் துறையில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும், அவ்விறுதி இலட்சியத்தை நாம் போய் சேருவதற்காக அமைக்கப்படும்பாதையாகும். நாம் அமைத்துள்ள பாதையின் நீளம் சிறிது; அமைக்க வேண்டி இருக்கும் பாதையின் நீளமோ மிகப் பெரிது.

நமது அமைப்போ சிறியது; ஆற்றியுள்ள செயல்களோ அச்சிறு அமைப்பின் ஆற்றலுக்கு அதிகமானது; கிடைத்துள்ள வெற்றியோ நம் ஒவ்வொருவரையும் அதிர்ச்சியுறச் செய்யக் கூடியது.

நாம் எதிர்த்துப் போரிடும் ஆட்சியோ வல்லமை மிக்கது; அதைக் கட்டிக் காத்து வருபவர்களோ ஆல்போல்தழைத்து, அருகுபோல் வேரோடி அங்கும இங்கும் எங்கும் பரந்து நிற்கும் நிலையில் உள்ளவர்கள். மக்களின் அறியாமையும், ஆட்சி தரும் நவீன பிரச்சார சாதனங்களும் அவர்களுக்குப் பக்கத் துணையாக இருக்கின்றன.

இந்தப் பெரும் சக்தியை நாம் எதிர்த்து வந்திருக்கின்றோம் — எதிர்த்துக்கொண்டு இருக்கிறோம். இந்த அடிப்படையைக் கொண்டுதான் நமது சாதனைகளை மதிப்பிட வேண்டும். அப்பொழுதுதான் நமது வளர்ச்சியின் உண்மை நிலையை நம்மால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

துவக்கததில் நமது இலட்சிய முழக்கம் அலட்சியம் செய்யப்பட்டது; பிறகோ, ஏளனத்திற்குள்ளாக்கப்பட்டது; அதற்கும் பிறகோ, அச்சந்தரக் கூடியதாயிற்று.

பின்னர் எரிச்சல்பட வேண்டிய நிலைக்கு வளர்ந்து, எவரும் மதித்துத் தீரவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது.

அலட்சியம் காட்டிய ஆளவந்தார்கள், நமது இலட்சிய வளர்ச்சியின் வேகம் கண்டு பீதி அடைகின்றனர். நமது இலட்சியத்தைச் சிதைக்க வழி வகையைத் தேடுவதில் தீவிரமாக முனைந்துள்ளனர்.

திராவிட நாடு கோரிக்கை சிறுபிள்ளை விளையாட்டு என்று பேசித் திரிந்தவர்கள், திராவிட நாடு கிடைக்குமா? கிடைக்க விடுவோமா எனப் பேசத் தொடங்கியுள்ளனர்.

பிரச்சினையை ஏறெடுத்துப் பார்க்கவும் ஆரமபத்தில் விருமபாதவர்கள், இப்பொழுது அப்படி ஒரு பிரச்சினை உண்டு என ஒப்பவும, அதுபற்றி ஆராயவும, அதை அழிக்கச் செயல்படவும முன்வருவது, நமது இலட்சியத்தின் நியாய பலத்தைக் குறிப்பதுடன் நமது உழைப்பின தரத்தையும அன்றோ குறிப்பிடுவதாக உள்ளது.

'திராவிட நாடு' யாரோ சிலர் சேர்ந்துபோடும கூச்சல் என்றார், முதல் முதலாக நாலரை ஆண்டுக்கு முன் பதவி ஏற்ற கவர்னர் பிரகாசா! அதே கவர்னர், இன்று கூறுகிறார், 'திராவிட நாடு இலட்சியம் வேகமாக வளர்ந்து வருகிறது. அதன் வளர்ச்சியில் அலட்சியங் காட்டுவது பிறகு பேராபத்தாக முடிந்துவிடும. அப்பிரச்சினை குறித்து இப்பொழுதே ஆராய்ந்து அதை இல்லாது ஆக்க வகை காண வேண்டும்' என்று!

ஏறத்தாழ ஐந்தே ஆண்டுகள் இடையில்; நமது இலட்சியத்தைக் கேட்டு கவலை கொள்ளாது இருத்தலே அரசியலில் சிறந்த முறை எனக் கண்டு செயல்பட்ட கவர்னர் பிரகாசா அத்துணிவு தொலைந்து, அவ்வுறுதிப்பாடு உடைந்து, அக்கடினத் தன்மை தகர்ந்து 'திராவிட நாடு பிரச்சினையின் அடிப்படையை ஆராயுங்கள், அதனால் ஆபத்து ஏற்படுவதற்கு முன்னதாகவே அதைத் தடுத்து நிறுத்த முன்வாருங்கள்' என எச்சரிக்கைச் செய்ய வேண்டிய நிலைக்கு வந்துவிட்டிருக்கிறார்!

எதைக் காட்டுகிறது, கவர்னரின் அலட்சியக் கீதமும், அபாய எச்சரிக்கை நாதமும? அதுவும், ஐந்தாண்டுக் காலத்துக்குள்ளாக ஏற்பட்டுள்ள இப்பெரிய மனமாற்றம் எத்தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது?

நமது இலட்சியம் வேகமாக வளருவதையும், அதற்கு அடிப்படையாக உள்ள நமது முயற்சியின் நேர்த்தியையும் அன்றோ காட்டுகிறது, கவர்னரின் செயல்!

நமது இலட்சியத்திலே நியாயம் நிரம்ப இருக்கிறது—நமது முயற்சியில் உறுதிப்பாடு, உள்ளப் புனிதம் நூற்றுக்கு நூறும் இருக்கிறது என்பதை வேண்டுமானால் ஒப்ப நமது மாற்றாருக்கு — கவர்னர் போன்றாருக்கு இன்னும் சிறிது காலம தேவைப்படலாம்; அதுவே தவிர, நமது இலட்சியம் நிச்சயம ஈடேறப்போவது திண்ணம்.

திராவிடர்களின் சுதந்தரத்திற்காக, திராவிடத்தின் ஒரு பகுதியான தமிழகத்தில் மட்டும இந்தக் கழ்கத்தார் பேசி வருகின்றனர்; ஆந்திரத்தை இவர்கள் கண்டார்களா? கேரளத்தை எட்டியதுண்டா? கன்னடத்தவருக்குச் சொல்லியதுண்டா?—என்று, தமிழகத்து அரசியல்உலக மேதாவிகள் சிலர் கேட்டுக் கொண்டிருந்தனர்—ஏன், இன்னமும் கூடக் கேட்கின்றனர்.

தமிழகத்தில் நாம் எழுப்பும் விடுதலை முழக்கம், தென்னாடு முழுவதும எதிரொலிக்காமல் இல்லை.

வடக்கு — தெற்கு என்ற பாகுபாட்டினை, நம காலம வரையேனும திரையிட்டு மூடி விடலாம என்று நமபிக்கொண்டிருந்த ஆந்திர, கன்னட, கேரள அரசியல்வாதிகள், இன்று வடக்கின் ஆதிக்க நோக்கையும, தெற்கின் அடிமை நிலையையும் பட்டவர்த்தனமாகவே பேசுகின்றனர்.

ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாட்டிற்கு வடவர் இழைத்த அநீதி குறித்து, நாம எழுப்பிய கண்டனக் குரலை, மைசூரும், கர்னூலும், திருவனந்தபுரமும் எதிரொலிக்காமல் இல்லை. நாம எத்தனை தெளிவாக நம் நிலையிலிருந்து கண்டித்து வருகிறோமோ, அத்தனை தெளிவாக மந்திரி பதவிப் பொறுப்பிலிருந்துகொண்டு பேசுவது இயலாது என்பதால், வாசகங்களை மட்டும் மாற்றிக்கொண்டு வடவரின் அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்பி வருகின்றனர். நம் அயரா உழைப்பு பலன் தந்து வருகிறது—நாம் அங்கெல்லாம் செல்லாமலிருக்கும போதே என்பதைத்தானே இந்த உண்மை காட்டுகிறது?

ஒரு இயற்கையான, வரலாற்றுப் பின்னணியோடு கூடிய நியாயமான கோரிக்கையாக இருந்தாலன்றி, நமது இலட்சியம், நாம் நுழையாத பிரதேசங்களில் எல்லாம எதிரொலிக்க நியாயமில்லை.

அந்த இலட்சியத்தைப் பலிதமாக்கிக்கொள்ளப் படை திரட்டவும், பாடிவீடு அமைக்கவும், பாதை போடவுமான வழிகள் செய்வதே திருச்சி மாநில மாநாடு,

மாநில மாநாட்டில் கலந்து கொள்ளும் பெருமையை விரும்பாத திராவிடரும் உண்டோ! வீரரே, விரைவீர் திருச்சிக்கு!

மாநிலப் புது அமைப்பு

அக்டோபர் திங்களிலேயே முடிந்துவிடுமாம்

அக்டோபர் முதல் தேதியன்று புதிய மாநிலங்கள் அமைந்துவிடும் என்று கூறப்பட்டு, பின்னர் அது 1957 ஜனவரி வரை ஒத்திப் போடப்படலாம் என்று பேசப்பட்டது; ஆனல், இப்போது, புதிய மாநிலங்கள் வரும் அக்டோபர் திங்களிலேயே, 15-ந் தேதியன்று அமைந்துவிடக் கூடும் என்று தெரியவருகிறது.

வரும் ஜூலை 9-ந் தேதியன்று மீண்டும் மக்கள் சபை கூட்டப்பட்டு, மாநிலப் புதுஅமைப்பு மசோதா, அரசியல் சட்ட திருத்த மசோதா, மற்றும் வங்கம்—பீகார் எல்லை நிர்ணயத்திற்கான மசோதா எல்லாம் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிடுமெனவும், அதன் பின் அக்டோபர் திங்களிலேயே புதிய மாநிலங்கள் நிர்மாணிக்கப் பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் பெரும் எதிர்ப்பும் கிளர்ச்சியும் தோன்றக்கூடும் என்பதாலேயே 1957 மார்ச் திங்களில் தேர்தலை நடத்தி முடித்து விடுவதற்கு வசதியாயிருக்கும்பொருட்டு, வரும் அக்டோபர் திங்களுக்குள் புது மாநில அமைப்பு விவகாரத்தை முடித்துவிட சர்க்கார் திட்டமிடுகிறதாம்.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ்' திட்டம்

மேலும் விரிவாகிறது

சென்னை, மே 10—

அரசாங்க தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் விரைவில் சென்னை மாநிலத்தில் மதுரை, அம்பாசமுத்திரம்; தூத்துக்குடி ஆகியவிடங்களுக்கும், திரு-கொச்சி மாநிலத்தில் கொல்லம், ஆலப்புழை, திருச்சூர், எர்ணாகுளம ஆகியவிடங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமெனத் தெரிகிறது.

இத்திட்டத்தினல் 67 தொழிலகங்களில் வேலை செய்யும் 3,000 பெண்கள் உட்பட 37,000 தொழிலாளர்கள் பயன்பெறுவர் எனக் கூறப்படுகிறது இதுவரை சென்னை நகரிலும், கோவையிலும் சுமார் 90,000 தொழிலாளருக்கு இவ்வசதி கிடைத்துள்ளது.

தாயகத்தின் விடுதலைக்காக இரு இளைஞர்களின் உயிர்த்தியாகம்

இரண்டு சைப்ரஸ் வீரர்களை வெள்ளை வெறியர் தூக்கிலிட்டனர்

லண்டன், மே 10—

"சைப்ரஸ்—எங்கள் தாயகம்; அன்னியரால்—வெள்ளையரால் ஆளப்படுவதைச் சகிக்கமாட்டோம்; நாங்களே எங்களை ஆண்டுகொள்வோம்; எங்கள் நாடு எப்படி வாழவேண்டுமென்பதை நிர்ணயிக்கிற உரிமை எங்களுக்கு இருக்க வேண்டும்; எங்களுக்குச் சுதந்திரம், விடுதலை வேண்டும்" என்று முழக்கமிடுகின்றனர், சைப்ரஸ் தேசிய இயக்கத்தினர்! ஆனல், வெள்ளையரோ, அங்கே உள்ள இராணுவத் தளங்கள்—மத்திய கிழக்கில் பிரிட்டனின் செல்வாக்கு நீடிப்பதற்குத் துணைபுரிவனவாகும் என்பதால், 'சைப்ரசில் கொண்டுள்ள பிடியை விடமாட்டோம்' என்று பேசுகின்றனர்.

இந்தப் பிடிவாதத்தை உடைத்தெறியப் போராடும் சைப்ரஸ் மக்கள்மீது கடுமையான அடக்குமுறைகளை அவர்கள் ஏவிவருகின்றனர்.

சைப்ரஸ் விடுதலை இயக்கத்தின் தலைவரான மகாரியஸ் பாதிரியாரை நாடு கடத்திக் கொடுமைக்காளாக்கியிருக்கிறது, வெள்ளை ஏகாதிபத்தியம்.

இதுகண்டு கொதித்தெழுந்த மக்கள், தாயக விடுதலைக்காக மகத்தான தியாகம்புரியும் செயல்களைப் புரிந்துவருகின்றனர்.

பலர் தீவிரவாதிகளாக மாறி தீரமிகு செயல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

துப்பாக்கி வெடிச் சத்தம், 24 மணி நேரமும் சைப்ரசின் பல பாகங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இந்த அடக்குமுறையை எதிர்த்து, கிரேக்கத்திலும் மகத்தான கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன.

மைக்கேல் கரோலிஸ், ஆண்டிரியஸ் டெமட்ரியஸ் என்ற இரு வீர இளைஞர்கள் தாயக விடுதலை கோரியமைக்காக தூக்கிலே தொங்கவிடப்பட்டிருக்கிறார்கள், வெள்ளையரால்!

இவர்கள் இருவரும் பயங்கரவாதிகள் என்ற பெரிடப்பட்டு, இந்தப் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர் கூட, இவர்களைத் தூக்கிலிடக் கூடாது என்று குரல் கொடுத்தனர்; அமெரிக்காரும் வேண்டினர்; கருணை கோரி மனுக்களும், தந்திகளும் பறந்தன; என்றாலும், வெள்ளையர், திமிரோடு, அந்த இரு இளைஞர்களையும் துடிக்கத் துடிக்க, தூக்கிலே தொங்கவிட்டிருக்கின்றனர்.

இந்தக் கொடுமையை அனுமதித்ததற்காக, பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடனைக் கண்டிக்கும் தீர்மானம ஒன்றை பிரிட்டிஷ் தொழிற்கட்சியினர் கொண்டுவருகின்றனர் என்றால், கொடுமை எத்தகையது என்பதைப் பார்த்துக் கொள்ளுங்களேன்!

'மதம் மாறினல் விமோசனம் என எண்ணதீர்'

தாழ்த்தப்பட்டோருக்கு ஜெகஜீவன்ராம் உபதேசம்

மங்களூர், மே 9—

"தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர், இந்து மதத்தை விட்டு வெளியேறினல் பலனடையலாம் — முன்னேறலாம் என்று நினைக்கிறார்கள்; இது இங்கு அவர்கள் அறையும் துன்பத்தின் விளைவாக எழும் யோசனையாகும்.

"தாழ்த்தப்பட்டோர் இந்து மதத்திலேயே இருந்து, இந்து மதத்தைச் சீர்திருத்த முயற்சிக்க வேண்டும்; அதுவே நல்லது,"

என்று, மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட மாணவர் மாநாடு ஒன்றில் பேசிய அவர், 'தாழ்த்தப்பட்டவர்கள், சர்க்கார் வழங்கும் கல்விச் சலுகைகளைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

'சர்க்கார் ஊழியர்களாகவோ, இதர துறை ஊழியர்களாகவோ செல்வோர், அந்த இடங்களில் பணி புரிய தாங்கள் தகுதி படைத்தவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும்,' என்றும் அவர் புத்திமதி கூறியிருக்கிறார்.

சுதந்திரம் பெற்ற டுனிஷியா, மொராக்கோ

பிரிட்டன் அங்கீகரிக்கிறது

லண்டன், மே 10—

முன்னாள் பிரெஞ்சுப் பகுதிகளான டுனிஷியாவையும், மொராக்கோவையும் சுதந்திர நாடுகளாகப் பிரிட்டிஷ் பேரரசு ஏற்றுக் கொண்டுள்ள தெனத் தெரிகிறது தூதவர் உறவுகள் விரைவில் மேற்கொள்ளப் படுமாம்.

'மாளிகை' தேடுகின்றனர்

உதகை, மே 10—

உதகையிலுள்ள 'அரண்மூர்' மாளிகையைப் பார்வையிட்ட சென்னை மாநில அமைச்சர்கள், சென்னை சட்டசபையின் கோடைகாலக் கூட்டத்தை இங்குக்கூட்ட வசதியுண்டா என்பதனைக் குறித்து யோசித்து வருகிறார்களாம்.

இம்மாளிகை ஜோத்பூர் சர்க்காருடைய தென்றும, ஜோத்பூர் அரசினர் என்ன விலைக்கு இம்மாளிகையை விற்குமென்றும் தெரியவில்லையாம்.

கிராமங்களில் வேலை செய்வது எப்படி?

வெளிநாடு சென்றுதான் கற்றுக்கொள்ள வேண்டுமா?

பிரதமர் நேரு பதில் தருகிறார்

புதுடில்லி, மே 10—

"கிராமங்களில் எப்படி வேலை செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள இந்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது வேடிக்கையிலும் வேடிக்கையாகும்! கிராமங்களில் வேலை செய்ய விரும்பினல் இவர்கள் நேராக கிராமங்களுக்குப் போக வேண்டுமே ஒழிய சமூக சேவை பட்டம் பெறுவதற்காக 5,000 மைல்கள் கடல் கடந்து செல்லக்கூடாது.

"நாம் எவருக்குச் சேவை செய்ய விரும்புகிறோமோ, அந்த மக்களை தெரிந்துகொள்ள வேண்டும் நம்முடைய நிலைமை முற்றிலும் மாறுபட்டது; நாம் பெற்றுள்ள வசதிகளும் குறைவு. எனவே, இங்குள்ள அடிப்படை நிலைமையில நமது பிரச்சினைகளை நாம் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்,"

என்று, பிரதமர் நேரு தேசியக் குழந்தைகள் நல மாநாட்டில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

'வங்கப் பகுதிகளை பீகாரிலிருந்து பிரிக்க அனுமதிக்கமாட்டோம்'

பீகார் மந்திரி சபையின் பிடிவாதக் கூச்சல்

பாட்னா, மே 9—

பீகாரின் சில பகுதிகள், மேற்கு வங்கத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பதாக, மாநிலப் புது அமைப்புக் குழுவினர் செய்திருந்த சிபாரிசுப்படி, அந்தப் பகுதிகள் மேற்கு வங்கத்துடன் இணைக்கப்படாமலிருப்பதற்காக என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து பீகார் மந்திரிசபையினர் விவாதித்திருக்கின்றனர்.

பீகார் பிரதேசங்கள் மேற்கு வங்க மாநிலத்துடன் இணையக் கூடாது என்று அவர்கள் திட்டமாக முடிவு செய்துவிட்டார்களாம்.

மேற்கு வங்கமும் — பீகாரும் இணைந்து ஒரே மாநிலமாக உருவெடுப்பது என்ற திட்டத்தை மேற்கு வங்க முதன்மந்திரி ராய் கைவிட்டதின் விளைவாக எழுந்துள்ள நிலைமையைப் பரிசீலித்த பின்பே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாம்.

இந்த இணைப்பு யோசனைக்கு முன்பே, வெளியிடப்பட்ட மாநில புது அமைப்புக் குழுவின் சிபாரிசுகளை அமுல்செய்யக் கூடாதென டெல்லி சர்க்காருக்குத் தெரிவிக்க பீகார் முதன்மந்திரி சின்ஹாவிற்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறதாம். இது விஷயத்தில் தொடர்ந்து உசிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதாம்.

இந்தத் தீர்மானத்தை ஒட்டி, பீகார் மந்திரிசபை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட ஒரு யோசனையை மந்திரி சபை ஏற்றுக் கொள்ளவில்லையாம். காங்கிரஸ் மேலிடத்தை இக்கட்டான நிலைக்குக் கொண்டுவரக் கூடிய எந்த ஒரு நடவடிக்கையையும் காங்கிரஸ் மந்திரி சபையினர் மேற்கொள்ளக் கூடாது என்று முதன்மந்திரி சின்ஹா தெரிவித்தாராம்.

பீகார் பகுதிகளுக்காக, மேற்கு வங்கத்தில் பெரும் கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில்தான் இந்த பிடிவாதமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாநாட்டு நுழைவுச் சீட்டு

12-5-56-ஆம் நாளிலிருந்து மாநில மாநாட்டு நுழைவுச் சீட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும் :—

(1) 'வள்ளுவர் நகர்' பந்தயத் திடல், திருச்சி

(2) 9, கிலேதார் தெரு, திருச்சி

★

கட்டண விபரம் :—

நான்கு நாட்களுக்கும் சேர்த்து :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	10-0-0	10-0-0
2-ம் பிரிவு	„	5-0-0	2-8-0
3-ம் பிரிவு	„	3-0-0	1-8-0

தனித்தனி ஒவ்வொரு நாளும் :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ	3-0-0	8-0
2-ம் பிரிவு	„	1-8-0	0-12-0
3-ம் பிரிவு	„	1-0-0	0-8-0

அரிசி விலை ஏற்றத்[illegible] காரணம் என்ன?

உணவுத் தானிய சங்கத்தின் கேள்வியும் அதிகாரியின் பதி[illegible]

சென்னை, மே 11—

உள்'மார்கெட்'டில் அதிக விலை கொடுத்து, இந்திய சர்க்கார் அரிசி வாங்கினதால்தான், விலை உயர்வு ஏற்பட்டதென்றும், ஒரு மணங்கு அரிசி விலை ரூ 14 ஆக இருக்கும் போது, இந்திய சர்க்கார் ரூ. 17—8—0-க்கு ஆந்திராவில் அரிசி வாங்கினதாகவும், ஐதராபாத்தில் 18—7—0க்கு வாங்கப்பட்டதாகவும் உணவு தானிய சங்கப் பிரதிநிதிகள் முறையிட்டபோது, உணவு டைரக்டர்-ஜெனரல் கி. ஏ. இராமகிருஷ்ணன் அதற்குப் பதிலளிக்கையில், மேற்படி அரிசி இராணுவத்திற்காக வாங்கப்பட்டதாகவும், அரிசியை விற்ற வியாபாரிகள் சில செலவுகளையும் ஏற்கவேண்டியிருந்ததென்றும், குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார் :—

'இந்திய சர்க்கார் இனி உள் மார்க்கெட்டில் சிறிதளவுக்குக்கூட அரிசி வாங்காது ; அரசினருக்[illegible] தேவைப்பட்டால், பர்மாவிலி[illegible] —சிறிது அதிக விலையா[illegible] அரிசியை வாங்கிக்கொள்ள [illegible] செய்திருக்கிறது.

"15 இலட்சம் டன் உண[illegible] தானியத்தைச் சேமித்து வைக்கக் கூடிய கிடங்குகளை நிர்மாணிப்பது தான் உணவு, விவசாய இலாகாவின் முதல் வேலை. நாட்டில் பல பாகங்களில் புதிய கிடங்குகள் கட்டப்படும். சென்னையில் 1,85,000 டன் அரிசியை சேமித்து வைக்கக்கூடிய கிடங்கு திறக்கப்படும். மாநில சர்க்கார்கள் சுயமாகத் தரும் கிடங்குகளையும் மத்தியப் பேரரசு எடுத்துக் கொள்ளும்."

5 இலட்சம் டன் கோதுமை வாங்க!

இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, மே 8—

ஏராளமான கோதுமையைச் சேமித்து வைக்கத் திட்டமிட்டிருப்பதை ஒட்டி, சுமார் 5 இலட்சம் டன் கோதுமையை வெளிநாடுகளிலிருந்து வாங்க இந்திய சர்க்கார் திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அமெரிக்காவிலிருந்து ஒரு இலட்சம் டன் கோதுமை வாங்கவும், பேச்சுவார்த்தைகள் நடக்கின்றனவாம் ; ஏற்கனவே அங்கிருந்து 4 இலட்சம் டன் வாங்குவதென முடிவாகிவிட்டதாம்.

ரஷ்யாவிலிருந்து சுமார் 40,000 டன் கோதுமை ஏற்கனவே இந்தியாவந்து சேர்ந்துவிட்டதாம்.

இந்தியாவிற்கு அரிசி விற்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்த பர்மியத் தூதுக் குழு ஒன்று வந்துகொண்டிருக்கிறது. விலையைப் பொறுத்து, வாங்கப்படும் அரிசியின் அளவு நிர்ணயமாகுமாம்.

குந்தா மின்சார உற்பத்தித் திட்டம்

இன்னும் பேச்சுவார்த்தை நிலையிலேயே உள்ளது

புதுடில்லி, மே 8—

குந்தா மின்சார உற்பத்தித் திட்டத்தை ரூ. 35,44,00,000 செலவில் தென்னாட்டில் நிறுவும் பொருட்டு கனடா சர்க்காரும், இந்தியப் பேரரசினரும் ஒப்பந்தம் செய்வதற்கான பேச்சு வார்த்தைகள் வெகுவிரைவில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

இத்திட்டத்திற்கு வேண்டிய அயல்நாட்டு நாணயமாற்றுச் செலாவணிக்காக 1½ அல்லது 2 கோடி டாலரும், மின்சார இயந்திரச் சாதனங்களையும் கனடா கொடுத்துதவுமாம்.

கடந்த ஆண்டு சென்னைக்கு வந்திருந்த கனடா நிபுணர் இருவர் குந்தா திட்டத்தை நல்ல திட்டமென்றனர். அவர்கள் கனடா அரசியலாருக்கு ஒப்படைத்த அறிக்கையின் பலனாகவே நல் ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெறவிருக்கிறதாம்.

சேது சமுத்திரத் திட்டம்

புதுடில்லி, மே 8—

மன்னார் வளைகுடாவையும்—பாக். ஜல சந்தியையும் இணைக்கும் சேது சமுத்திரம் கால்வாய்க்கு பாம்பன் பாலத்திற்கு மேற்கே சில மைல்களில் தகுதியான இடம் இருப்பதாக சேது சமுத்திர திட்டக்குழு சிபாரிசு செய்திருக்கிறதாகத் தெரிகிறது. திட்டத்திற்கு ரூ. 9,98 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்

சேது சமுத்திர கால்வாயின் நீளம் 5,400 கெஜம் ; 32 அடி ; அகலம் 150 அடி. முக்கிய கால்வாய்க்கு 5 கிளை கால்வாய்களும், கால்வாய் ஒன்றுக்கு ஒரு மதகும், ஒரு பாலமும் இருக்கும்

கோலார் மாவட்டத்தில் சிறு ரக இயந்திரக் கருவி தொழிற்சாலை

பெங்களூர், மே 9—

'இந்த் ஸ்மால் டூல்ஸ்' என்ற பெயர்கொண்ட சிறு ரக இயந்திரச் சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று, கோலார் மாவட்டத்திலுள்ள பங்காருப்பேட்டையில் ஒரு தனிப்பட்ட நிறுவனத்தினால் நிறுவப்படவிருக்கிறதெனத் தெரிகிறது. சுவிட்சர்லாந்திலுள்ள ஒரு இயந்திரக் கருவி நிறுவனத்தின் உதவியுடன் இத்தொழிலகம் அமையுமாம். இதனை நிறுவ ரூ. 75 இலட்சம் செலவிடப்படுமெனத் தெரிய வருகிறது.

'நம் நாடு' வளர்ச்சிக்கு

அரக்கோணம் தோழர்கள் அன்பளிப்பு

'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக, அரக்கோணம் தி. மு. கழகத் தலைவர், தோழர் மு. கருணாநிதி மூலம் அனுப்பிய ரூ. 44 (நாற்பத்தி நான்கும்) வரப்பெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

பாட்டாளிக்குத் தரப்படும் உதவித்தொகை அதிகரிப்பு

மாஸ்கோ, மே 9—

ரஷ்யாவில் மிகக் குறைந்த சம்பளம் வாங்கும் பாட்டாளிகளுக்கு வயோதிகக்கால உதவித் தொகை இருமடங்காக சோவியத் அரசினர் ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளனராம். இதுவரை குறைந்த பட்ச உதவிச்சம்பளம் திங்கள் ஒன்றுக்கு 13 பவுனுக்குச் சமமாயிருந்தது ; இனி அது இரு மடங்காகுமாம்.

மலாயா கம்யூனிஸ்டுகளின் இரகசியத் திட்டம்

சர்க்கார் கைக்குக் கிட்டிவிட்டதாம்

கோலாலம்பூர், மே 9—

"கம்யூனிஸ்டு கட்சி இப்போது நடத்திக் கொண்டிருக்கிற சண்டையை நிறுத்தத் தயாராக இல்லை ; மாறாக, இராணுவத் தோல்வியை அரசியல் வெற்றியாக மாற்றவே திட்டமிட்டிருக்கிறார்கள்,"

என்று கூறும் குறிப்பு ஒன்று, தங்களுக்குக் கிடைத்திருப்பதாக மலாயா சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள்.

செலன்கார் ராஜ்ஜியத்தில், கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதற்காக மலாயா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது, இந்த இரகசிய சுற்றறிக்கை அகப்பட்டதாம்.

இந்தச் சுற்றறிக்கையில், கடந்த ஆண்டு கம்யூனிஸ்டுகள் நடத்திய சமாதானப் பேச்சுக்கள், பாலிங்கில் நடைபெற்ற சமரசப் பேச்சுக்கள் எல்லாம் வெறும் பிரச்சாரத் தந்திரங்கள் என்றும், இராணுவத் தாக்குதலை நடத்துவதைவிட அரசியல் தாக்குதல் நடத்துவதே உசிதமானது என்று கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர் என்றும், தகவல்கள் காணப்படுகின்றனவாம்.

அர்த்தால் எதிரொலி

14 தோழர்களுக்குத் தண்டனை

பிப். 20—அர்த்தால் சம்பந்தமாக நடைபெற்ற வழக்கில் இவ்வூர் தோழர்கள் பதினொன்று பேர்களுக்கு, ரூ. 2 அபராதமும் கட்ட மறுத்தால் 4 நாள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

நான்கு தோழர்கள் அபராதம் கட்டிவிட்டனர் ; எஞ்சிய 10 பேர்கள் சிறைப்புகுந்தனர். தற்போது சிறையிலிருக்கும் கீழ்க்கண்ட பத்து பேர்களும் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் :—

வி ஏ. இராமநாதன், ஆர் இரத்தினசபாபதி, என். கணேசன், எம். கருப்பண்ணன், ஏ. மாரியப்பன், ஆர். பழனியப்பன், வி. கே. கருணாகரன், பி. முஸ்தபா, என் சையதபீர், கே. பொன்னுசாமி

இவர்களை 8—5—56 தேதியிலிருந்து நான்கு நாட்களுக்கு சிறையில் வைத்திருக்கிறார்கள்.

ரயில்வே ஊழியருக்கு சுகவாழ்வு அளிக்க!

புதுடில்லி, மே 9—

இந்த நிதி ஆண்டில் ரூ 14,23,00,000 இரயில்வே சிப்பந்திகளின் சுகவாழ்வு வேலைகளுக்காக செலவிடப் படுமென்றும், இத்தொகையில் ரூ. 6,85,00,000 இரயில்வேத் தொழிலாளருக்குப் புதிய குடியிருப்பு அமைத்தல், தண்ணீர் வசதி, சுகாதாரம், தெரு விளக்கு, 'மார்க்கெட்' வசதி போன்றவைகளுக்காகச் செலவிடப்படுமென்றும் தெரியவருகிறது

இவ்வாண்டு புதுமனைகள் கட்டுவதற்கு ரூ. 5,34,00,000 ஒதுக்கப்பட்டுள்ளதாம். இதற்றில் 95 சதவிகிதம் 3-வது, 4-வது வகுப்பு சிப்பந்திகளுக்கு ஒதுக்கப்படுமாம்.

சுமார் ரூ. 4,83,555 மதிப்புள்ள 8,20,816 பறவைகள் 1955-56-ல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

வெளிநாடுகளின் நாணயங்கள்

நான்கு முறை இந்தியாவில் தயாரிக்கப்பட்டன

நாணயங்கள் அடித்துத் தருமாறும், 'கரன்சி நோட்'கள் அச்சடித்துத் தருமாறும் 1955-56-ம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து நான்கு கோரிக்கைகள் வந்தன என்றும், இது போன்ற கோரிக்கைகள் ஏகதேசமாக இலாபம் சம்பாதிக்கும் நோக்குடன் அல்லாது உதவி செய்யும் நோக்குடன் நிறைவேற்றப்படுகின்றன என்றும் மக்கள் சபையில் ரெவினியூ மந்திரி ஏ. சி. குஹா தகவல் தந்திருக்கிறார்.

எந்தெந்த நாடுகளுக்கு நாணயங்களும், நோட்டுகளும் தயாரித்துத் தரப்பட்டன என்ற தகவல் வெளியிடுவது உசிதமல்ல என்றும், வெளியிட்டால், தகவல், தவறான வழிகளுக்குப் பயன்பட உபயோகப்படுத்தப்படும் என்றும் அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

தசாம்ச நாணயங்கள்!

"இன்றைய நிலையில் நடைமுறையில் பயன்பட்டுவரும் பழைய நாணயங்கள் இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளுக்குள் மாற்றப்பட்டு, புதிய ஒரு அணா நாணயத்தை அமுலுக்குக் கொண்டு வரலாம்,"

என்று, 'ரெவினியூ, பாதுகாப்பு செலவு அமைச்சர் ஏ. சி. குகா மாநிலங்கள் சபையில் கூறியுள்ளார்.

புதிய ஒரு அணா நாணயம் 10 புதிய பைசாக்களுக்கு ஈடாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

1-4-57 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் தசாம்ச நாணய முறை பற்றியும், அவற்றின் தன்மைகள் குறித்தும் அரசினரால் விளக்கமாக பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

தற்போது வழங்கப்பட்டுவரும் நாணயங்கள், புதிய நாணயங்கள் வந்த பின்னரும் 4 ஆண்டுகளுக்கு செலாவணியில் இருக்குமாம்.

மதுரை தமிழ்ச் சங்கப் பொன் விழா

தலைமை தாங்குவோர் பட்டியல்

இம்மாதம் 30-ம் தேதி முதல் ஜூன் மாதம் 5-ம் தேதி முடிய எழு நாட்கள் நடைபெறும் மதுரை தமிழ்ச் சங்கப் பொன் விழாவில் பல்வேறு பகுதிகளுக்குத் தலைமை தாங்க கீழ்க்கண்டவர்கள் இசைந்துள்ளனர் :—

சென்னை கவர்னர் பிரகாசா; திருவாளர்கள் : இராசகோபாலாச்சாரியார்; அருள்நந்தித் தம்பிரான்; குன்றக்குடி-அடிகளார்; அமைச்சர்கள் : ஓ. வி. அழகேசன்; எம். பக்தவத்சலம்; சண்முகராசேசுவரநாகநாத சேதுபதி; எம். ஏ. மாணிக்கவேலர்; இராசா சர். முத்தையா (செட்டியார்); டி. எம். நாராயணசாமி(பிள்ளை); நீதிபதி என். சோமசுந்தரம்; ஓ. பி. இராமசாமி (ரெட்டியார்); எஸ். சோமசுந்தர பாரதி ; இலங்கையைச் சேர்ந்த கனகையா வைத்தியநாதன், எஸ். நடேசன்; டாக்டர் சுப்பராயன்; பெரியார் ஈ. வெ. இராமசாமி; டி. கே. சண்முகம்; சுவாமி சித்பவானந்தர் ; தளவாய் - குமாரசாமி (முதலியார்); திருமதி புஷ்பம்-நடராசன்.

'பிராவிடண்ட்' நிதி

புதுடில்லி, மே 10—

இன்னும் சில கைத்தொழில்களுக்கு 'பிராவிடண்ட்' நிதித் திட்டம் விரைவில் விரிவாக்கப்படும் என்று அரசியலார் சம்புவதாக மக்கள் சபையில் தொழிலாளர் துணை அமைச்சர் அபீத் அலி கூறியுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

கழகக் கொடி ஏற்றுவீர்!

13—5—56-ஆம் நாள் மேற்கொள்ளும் மாநில மாநாட்டு விளம்பர நாளை ஒட்டி, ஊர்வலம் நடத்துதல், துண்டு அறிக்கை வெளியிடுதல், சுவரொட்டி விளம்பரம் செய்தல் ஆகியவற்றோடு பழைய கழகக் கொடியைப் புதுப்பித்தல், புதுக்கொடி ஏற்றுதல் ஆகிய பணிகளையும் கழகத் தோழர்கள் மேற்கொள்வார்களாக !

★★★★★★★★★★★★★★★★★★★★★★

அல்ஜீரியர்கள் படுகொலை

பிரெஞ்சு இராணுவத்தின் நிந்திய வெறிச்செயல்

அல்ஜியர்ஸ், மே 10—

...செவ்வாயன்று, இரத்த ...பிடித்த பிரெஞ்சு ஏகாதிபத ...கொன்று குவித்த ...அல்ஜீரியர்களின் எண் ...சுமார் 200 என்று ...செய்தி வந்தது அல்லவா? ...ஆனல், பிரெஞ்சு இராணுவம் ...விழுங்கிய அல்ஜீரியர்க ...தொகை 200 அல்ல—மாருக ஆயிரத்திற்கும் அதிகம் என்று இப்போது செய்திதரப் பட்டிருக்கிறது.

சில பகுதிகளில் இராணுவத்தினர், சிவில் போலீசாரின் அதிகாரங்களையும் தாங்களே மேற்கொண்டு தீவிர வாதிகளை ஒடுக்கும் வேலையை மேறகொண்டிருக்கின்றனராம்.

வேறு வேலைக்கு வழி செய்யாமல் ஆட்குறைப்பு கூடாது

தாமோதர் திட்ட தொழிலாளர்கள் கோரிக்கை

கல்கத்தா, மே 10—

"வேறு வேலைக்கு வழி செய்யாமல் ஆட்குறைப்பு செய்யக்கூடாது; ஏற்கனவே 875 தொழிலாளருக்கு வழங்கப்பட்டுள்ள ஆட்குறைப்பு அறிக்கைகள் திரும்பப் பெறுக வேண்டும்" என்ற தங்களின் கோரிக்கை கொண்ட வேலை நிறுத்த அறிக்கையை தாமோதர் பள்ளத்தாக்கு 'கார்ப்பரேஷன்' சிப்பந்திகள் சங்கம், மே 16-ம் நாளன்று அதன் அதிகாரியிடம் கொடுக்கத் தீர்மானித்துள்ளது.

அதிகாரிகளிடமிருந்து திருப்திகரமான பதிலை எதிர்பார்க்கப்படுகிறது பதில் திருப்தியளிக்க வில்லையெனில் காலவரம்பின்றி வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

நாகர் தேசீயக் கவுன்சில் கலைக்கப்பட்டுவிட்டதாம்

ஷில்லாங், மே 11—

விடுதலைக்காகப் போராடிவரும் நாகர் தேசியக் கவுன்சிலை, அதன் தலைவரான பிஜோ கலைத்துவிட்டாராம்.

அதிகாரபூர்வமான அறிவிப்புகள் இதனைத் தெரிவிக்கின்றனவாம்.

சர்க்கார் நாகர்மீது மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளின் நிர்பந்தம் காரணமாகவே இந்தக் 'கவுன்சில்' கலைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் கூறப்படுகிறதாம்.

இத்தனை ஆண்டுகளாகப் பாடுபட்டு, கட்டி வளர்க்கப்பட்ட இந்தத் தேசியக் கவுன்சிலை பிஜோ கலைத்தது நாக மக்களுக்கு ஆச்சரியத்தை அளித்திருக்கிறதாம்!

பிஜோ, இதுபோன்ற ஒரு 'சர்வாதிகார' நடவடிக்கையை மேற்கொள்ளுவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவே இல்லையாம்.

வெள்ளத் தடுப்பிற்கு ரூ. 60 கோடி

திட்டக் குழு ஒதுக்கியிருப்பதாக தகவல்

புதுடில்லி, மே 10—

இரண்டாம் திட்டத்தின் கீழ் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக திட்டக் குழுவினர் ரூ. 60 கோடி ஒதுக்கியிருக்கிறார்களாம்.

இந்தத் தகவலை, மத்திய நீர்ப்பாசன, மின்சார இலாகா உதவு மந்திரி ஜெய்சுக்லால் ஹாதி தெரிவித்திருக்கிறார்.

மந்திரிசபை வெள்ளத் தடுப்பிற்காக ரூ. 117 கோடி வேண்டுமெனக் கேட்டதாகவும், இது 60 கோடியாகக் குறைக்கப்பட்டுவிட்டதாகவும் அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியருக்கு சம்பள உயர்வு!

இந்தியப் பேரரசின் நிலை

புதுடில்லு, மே 11—

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை அதிகரிக்க சென்னை, அசாம், பீகார், பம்பாய், ஐதராபாத், மத்திய பாரதம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், திரு-கொச்சி, விந்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் சர்க்கார் இசைந்துவிட்டனர் எனத் தெரிய வருகிறது.

இன்றுள்ள ஊதியத்தொகையே நியாயமாக இருப்பதாக 9 மாநிலங்கள் கருத்தறிவித்தனவாம்; சில மாநிலங்கள் இன்னும் எதையும் தெரிவிக்கவில்லையாம். எல்லா மாநிலங்களின் கருத்தையறிந்த பின்னர்தான் இதுபற்றிய செலவு விவரத்தை இந்தியப் பேரரசு தயாரிக்குமாம்.

பாக். பிரதமரின் சீனப் பயணம் ஒத்திவைப்பு!

கராச்சி, மே 10—

சீனு செல்ல இருந்த பாகிஸ்தான் முதலமைச்சர் முகமது அலி தம் பயணத்தைத் தள்ளிவைத்து விட்டார் எனத் தெரிகிறது. மேற்கு பாகிஸ்தான் அமைச்சரவை நெருக்கடிதான் இதற்குக் காரணமென்று அவ்வட்டாரங்கள் கருத்தறிவிக்கின்றன. இந்நெருக்கடி தீராவிடில் மத்திய அமைச்சரவையும் பாதிக்கப்படுமாம்.

கழகக் கூட்டம்

★

ஏரல்:

13—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: சங்கரநாராயணன்

பேசுவோர்: இரா. சு. தங்கப்பழம், அறவேந்தன்

குடந்தை நகர தி. மு. க. மாணவர் கிளை

13—5—56 மாலை 6 மணியளவில், மேற்படி மாணவர் கிளைச் சார்பில், குடந்தை அரண்மனைத் தோட்டத்தில், பொதுக்கூட்டம் நடைபெறும். பேராசிரியர் க. அன்பழகன், 'மாணவர்களும்—அரசியலும்' என்ற தலைப்பில் விளக்கவுரை ஆற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

13—5—56 காலை 9 மணியளவில், சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (4, நமசிவாய முதலி தெரு), தோழர் கா. சே. அன்பரசு தலைமையில், 'அரசியல் தத்துவங்கள்' என்ற தலைப்பில், தோழர் இளம்பரிதி அவர்களும், மற்றும் பல தோழர்களும் பேசுவர்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

13—5—56 காலை 9 மணிக்கு, பனைமரத் தொட்டி, சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மண்டபத்தில், இலக்கிய சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். திருகு பெ. துரைசாமி தலைமையில், தோழர்கள் ம பொ. கேசவராமன், அ. ஆடியபாதம், நா. சண்முகனார், ம. செல்வராசன் முறையே 'தேவாரம்', 'கலிங்கப் போர்', 'புரவலனும்—புலவனும்'. 'புறநானூற்றுக் காட்சிகள்' என்ற தலைப்புகளில் பேசுவர்.

மாநில மாநாட்டு விளம்பர நாள்:

13—5—56 ஞாயிறு காலை 7 மணியளவில் திரு. வி. க. நிடலி (சான்ராஸ்மித் நகர்) விருந்து சென்னை 17, 19, 24, 26 வட்டங்களின் தி மு. கழகங்கள் சார்பில் ஓர் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, சூளை, பெரியமெட்டு, தாதாசா மக்கான், குயப்பேட்டை ஆகிய முக்கிய வீதிகளில் செல்லும்.

* * *

சென்னை 42-வது வட்டக் கிளையின் சார்பில், வட்டம் முழுமையிலும். 13—5—56 மாலை 3 மணியளவில், மாநாட்டு விளம்பர ஊர்வலம் கழகப் பணிமனையிலிருந்து (எண் 4, நமச்சிவாயமுதலி தெரு திருவல்லிக்கேணி) புறப்படும்.

* * *

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை 30-வது வட்ட தி. மு கழகச் சார்பில், 13-5-56 மாலை 3-மணியளவில், தோழர் கே வி. சிராமுலு தலைமையில், மேற்படி வட்டம் முழுவதிலும் சைகிள் ஊர்வலம் நடைபெறும்.

பம்பாயில்:

13—5—56ல், பம்பாய் தி. மு. கழக ஆதரவில், பம்பாயின் முக்கிய பகுதிகளில், ஆயிரம் சைக்கிள்கள் ஊர்வலமாகச் சென்று, மாநாட்டுச் செய்தியை விளம்பரப்படுத்தப் படும் என்று 'வள்ளுவர் நகரு'க்கு 'டிரங் போன்' செய்தி வந்திருக்கிறது.

புற்று நோய்க்கு வெற்றிலை காரணமா?

கொழும்பு, மே 11—

வெற்றிலைப் போடும பழக்கத்தால் தான் இலங்கை வாசிகளில் பலருக்கு வாயில் புற்று நோய் கண்டிருப்பதாக தக்க ஆதாரங்களுடன் தெரிய வருவதாகக் கூறப்பட்டுள்ளதாம். பெரும்பாலும் சிங்களவரிடையேயும், பொதுவாக வட மாகாணத்தின் தமிழர்களிடையேயும் இப்புற்று நோய் பரவியிருக்கிறதெனவும் கூறப்படுகிறது.

போபாலில் அமையும் கனரக மின்சார சாதன தொழிற்சாலை

1960-ல் உற்பத்தி துவங்குமாம்

புதுடில்லி, மே 10—

போபாலில் அமைக்கப்படவிருக்கும் கனரக மின்சார சாதன உற்பத்தித் தொழிற்சாலை 1960-ல் உற்பத்தி துவங்கும் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடநாட்டிலேயே எல்லாப் பெரிய தொழில்களையும் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும் என்பதுடன், நிர்மாணிக்கப்படும் தொழில்கள் அசுர வேகத்தில், மிகக்குறுகிய கால அளவிலேயே உற்பத்தியைத் துவங்கிவிட வேண்டும் என்றும் வடவர் விரும்புகின்றனர் என்பதையே இந்த அறிவிப்புத் தெரிவிக்கிறது.

ரூ 25 கோடி துவக்க முதலீடாக இந்தத் தொழிற்சாலையில் முடக்கப்படும் என்றும், உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளவற்றில் பெரும்பகுதி இரண்டாம் திட்ட காலத்திற்குள் உற்பத்தியாகத் துவங்கிவிடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இரண்டு காகிதத் தொழிற்சாலைகள்

சென்னையில் அமையுமாம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சென்னை மாநிலத்தில் குறைந்தது இரண்டு காகித உற்பத்தித் தொழிற்சாலைகளேனும் நிச்சயம் அமையுமாம்.

இவற்றுள் ஒன்று பவானி சாகரிலும், மற்றொன்று மேட்டூரிலும் இடம் பெறுமாம். இங்குதான் போதுமான தண்ணீர் மூலப்பொருள் இவை எல்லாம் கிடைக்கின்றனவாம்.

தாகூர் முயன்றும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களையும், சிந்தனைகளையும் வெளியிட முடியாது என்று கூறி வந்தோர்க்கு, தாகூரின் வங்க மொழிப் படைப்புகள் சரியான பதிலாக அமைந்தன என்று கூறலாம்.

"தாகூர், ஆங்கிலத்தில் பெரும் அறிவு பெற்றவராயிருந்தும்கூட அவர், தமது கவிதைகளை வங்காளத்தில் இயற்றியதுதான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதாகும். இந்தியாவில் பலர், தங்கள் தாய் மொழியை வீட்டுக்குள் மட்டும் உபயோகிக்கும் மொழியாகக் கொண்டிருக்கிறார்கள்; இதர வெளி விவகாரங்கள் அனைத்திற்கும் ஆங்கிலத்தையே உபயோகிக்கிறார்கள்; இவ்வளவு ஆங்கில மோகம் இருந்த நாட்களில்தான், தாகூர், தாய் மொழியில் மகத்தான இலக்கியங்களை எழுதினார்.

"நம்மிலே பலருக்கு ஆங்கிலம் தெரியும்; ஆனல், நமக்குள்ள மொழிகளை ஒருவருக்கொருவா அறியமாட்டோம; இது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

"நம்மாலே எத்தனை இந்திய மொழிகளைக் கற்றுக்கொள்ள முடியுமோ அத்தனை மொழிகளையும் கற்றுக்கொண்டாக வேணடும்; அப்போதுதான், ஒரு மாநிலத்தவா மற்ற மாநிலத்தவருடன முறையாகக் கருத்துக்களைப பறிமாறிக் கொள்ளவும, இந்தியாவில எத்தனை வேறுபாடுகளிருப்பினும அவற்றினூட உள்ள அடிப்படை ஒற்றுமையை உணரவும முடியும.

"இத்துடன், நாம, ஆங்கிலம் முதலிய வெளிநாட்டு மொழிகளிலும திறமை பெற்று விளங்க வேணடும்,"

எனறெலலாம்கூட, கவர்னர் பெருமான பேசியிருக்கிறார்.

கிராமங்களுக்குச் சுகாதாரக் குடிநீர்

சர்க்கார் திட்டம்

சென்னை, மே 9—

"மதுரை உட்பட 6 மாவட்டங்களில் காலராவினுல் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் தேசியக் குடிநீர் வசதி சுகாதாரத்திட்டம் ஆகியவை அமுல் நடத்தப்படும்; இதற்கு மொத்தம் ரூ. 120 இலட்சம் செலவாகும்; இத்தொகையில் பாதியை மத்திய சர்க்கார்ஏற்கும்," என்று, சென்னை சுகாதார அமைச் ஏ. பி ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 250 இலட்சம் செலவில் 10,000 கிணறுகள் வெட்டப்படுமென்றும், குடிநீர் வசதி சம்பந்தமாக உயர் 'டாங்கு'கள் கட்டுவதுடன், 400 திட்டங்கள் நிறைவேற்றப் படுமென்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் ரப்பர் சாகுபடி பரப்பளவு, 1954 டிசம்பர் மாதத்தில் மொத்தம் 1,76,647 ஏகராவாக இருந்தது; சென்ற வருட இறுதியில, அது 2,15,726 ஏகராவாக உயர்ந்துவிட்டது.

திருப்பதியில் புதிய ஆலை

12,000 கதிர்களுடன் துவங்க அனுமதி

திருப்பதியில் 12,000 கதிர்களுடன் ஒரு புதிய ஆலையை திறவ அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனைத் தொழில் வர்த்தக அமைச்சர் டி. டி கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டின் மாநிலங்களின் ஆலைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள விவரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்:— திரு-கொச்சி 2 ஆலைகள் (22,600 கதிர்கள்); மைசூர்: 3 ஆலைகள் (34,000 கதிர்கள்); சென்னை: 55 ஆலைகள் (60,6944 கதிர்கள்); ஆந்திரா: 5 ஆலைகள் (90,560 கதிர்கள்);

வேகமாக நிகழ்ந்துவரும் மாற்றங்கள்

மாஸ்கோ, மே 11—

ரஷ்யத் தொழிலாளர்கள் தங்கள் அதிகாரிகளுக்கு இரு வார 'முன்னறிவிப்பு' தந்துவிட்டு, வேலையினின்று விலகி விடுவதற்கோ அன்றி வேறு வேலையை ஏற்றுக் கொள்வதற்கோ உரிமை வழங்கப்பட்டுள்ளதாம். ரஷ்ய அரசியலாரின் உத்தரவினுல், அனுமதியின்றி வேலையை மாற்றிக் கொண்டதால் ஏற்பட்டுள்ள வழக்குகளும், தண்டனைகளும் ரத்தாகின்றனவாம்.

திருமணம்

13—5—56 காலை 9 மணிக்கு, சென்னை—திருவொற்றியூர், தியாகராயபுரம், எண் 581 இல்லத்தில் தோழர் சகாதேவன்—தோழியர் அஞ்சலை திருமணம், திரு எம். எஸ். முத்தையா தலைமையில் நடைபெறும். தோழர்கள் ம. இளஞ்செழியன், 'வளையாபதி' ஜி. முத்துகிருட்டிணன் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

13—5—56 காலை 8 மணிக்கு, சென்னை—இராயபுரம், சிமிட்டரி ரோடு, எண் 7-ல் கி. தியாகராசன் தலைமையில், தோழர் மா. நீலகண்டன்—தோழியர் எம். இ. லோகம்மாள் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, ஏ. கே. வில்வம், டி. டி. அரசு, ச. செல்லப்பாண்டியன், க. மணி அரசு வாழ்த்துரை வழங்குவர்.

* * *

13—5—56 காலை 8 மணிக்கு மேல், சென்னை, இராமராவ் தோட்டம், 2-வது தெரு, 2-ம் எண் இல்லத்தில், தோழர் மு. கோபால்—தோழியர் சரோசா திருமணம் தோழர் மு. புரட்சிமணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோ இளவரசு, முகவை ஆர். எஸ். பாண்டியன் வாழ்த்துரை வழங்குவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி:

சட்டதிட்ட திருத்த நகலும் மாநாட்டு தீர்மானங்களும்

வள்ளுவர் நகரிலுள்ள தி. மு. கழகத் தலைமை நிலையத்தில், 16—5—56 காலை 8 மணி முதல் 9-30 மணிவரை நடைபெறவிருக்கும் தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டத்தில் (Working Committee) சட்ட திட்ட திருத்தமும், மாநாட்டில் கொண்டுவர வேண்டிய தீர்மானங்கள் குறித்தும் பரிசீலனை செய்யப்படும்.

அதற்குப் பின்னர் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் பொதுக்குழுவின் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.